# புறநானூறு போற்றும் பழந்தமிழர் பண்பாடு

***க. ரேணுகாதேவி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7894

***ஆய்வுச்சுருக்கம்***
*பண்டைத் தமிழரின் வாழ்வியல் செய்திகளைச் சங்க இலக்கியம் எடுத்தியம்புகின்றது. இவ்விலக்கியம் என்றென்றும் அழியாத பண்புகளையும், பழக்கவழக்கங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. குறிப்பாக, புறநானூறு தமிழிலக்கியத்தின் அணையா விளக்காகவும், பழங்காலக் கருவூலமாகவும், பண்டைத் தமிழர்களின் பண்பாட்டுச் சேமிப்பாகவும் காணப்படுகின்றது. எத்தகைய புகழுக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது. புறநானூறு கூறும் தமிழர்களின் பண்பாட்டு நெறிகளைப் பற்றியதாக இக்கட்டுரை அமைகின்றது.*
***திறவுச்சொற்கள்:*** *பண்பாடு, வீரம், ஈகை, கல்வி நம்பிக்கை, வழிபாடு.*

## தமிழர் பண்பாடு

பழந்தமிழர் பண்பாடு மிக உயர்ந்தது. உலகமெல்லாம் பாராட்டிப் போற்றக்கூடியது. தமிழ் மக்கள் உலகத்தை ஒன்றென்று கருதினர் உலக மக்களை ஒரு குலத்தவராக எண்ணினர். இத்தகைய உயர்ந்த, பரந்த நோக்கம் தமிழர்கள் ஒப்பற்ற பண்பாட்டை விளக்குவதாகும்.

“**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவது அன்றே வாழ்தல்**
**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே**
**முனிவின் இன்னாது என்றலும் இலமே**” ***(புறம் -192)***

என்ற கணியன் பூங்குன்றனார் பாடல் வரிகள் தமிழர்களின் தனித்த பண்பாட்டை விளக்குகிறது.

## கல்வியின் சிறப்பு

கல்வி கற்றவருக்கு எங்கு சென்றாலும் பேரும், புகழும் கிட்டும் ஒரு நாட்டில் இருக்கக்கூடிய மக்களில் எல்லாம் சிறந்தோராகக் கருதப்படுபவரும் கற்றோரேயாவர்.

“**கற்கை நன்றை கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே**”

என்றும்,

“**ஓதுவது ஒழியேல்**” என ஔவையாரும்,

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து"**
**(குறள் - 398)**

என்று வள்ளுவரும் கல்வியின் சிறப்பைக் கூறியுள்ளார். ஔவையாரின் கல்விப் புலமையை அறிந்த அதியமான் பரிசில் கொடுக்காமல், காலம் தாழ்த்துகிறான் என்பதை உணரார் ஆயினும், ஔவை பாடிய பாடலில் உயர்ந்தோங்கி நிற்பது கல்வியின் பெருமையாகும்.

### ஈகை

பகுத்துண்டு வாழும் பெருமித வாழ்க்கை நம் முன்னோருடையது. அவர்கள் உலக வாழ்க்கையில் நம் நலத்தை மட்டுமே எண்ணாமல், துன்புறுவோரைக் கண்ட இடத்து பிறர்க்குதவும் உள்ளுணர்வும், நன்னோக்கும் உடையவர்கள் இன்றும் ஆங்காங்கே இத்தன்மை இருப்பதை உணரலாம். அவர்தம் உலகளாவிய சிந்தனையும், அருள் நோக்குமே இவ்வுலகை வாழ்விக்கின்றது இதனை விளக்கும் விதமாக புறநானூற்றின் பாடல்.

**"வாழச் செய்த நல்வினை யல்லது**
**ஆழுங் காலைப் புனைபிறிது இல்லை"**
**(புறம்-367)**

என்ற ஔவையாரின் பாடல் வரிகளில் தெவையானவருக்கு ஈதலாகிய கடமையினைச் செய்தலினால் அடையும் மகிழ்வு வாழ்வின் இறுதி நாளில் உயிர்க்குத் துணையாக அமையாது என்று கூறப்படுகிறது. தேவைக்கு அதிகமான செல்வம் துன்பம் விளைவிக்கும். அதே வேளையில் அச்செல்வத்தை இல்லாதவருக்குக் கொடுப்பதன் வாயிலாக இன்பம் அடைவர்.

**"செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்போம் எனினே தப்புநபலவே"**
**(புறம் - 189)**

என்ற பாடலின் வழியாகவும், பொருள் ஈட்டுவதன் பயனே ஈதல் என வலியுறுத்தப்படுகிறது. ஈதலினால் கிடைக்கும் மகிழ்வை அரிய வாய்ப்பாக உணர்த்துவதோடு நின்று விடாது தானே அதை வைத்து அனுபவிக்க நினைத்தால் இழக்கக் கூடியவை பலவாகும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

### நம்பிக்கையுணர்வு

ஔவையார் அதியமானின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்ததை,

**"தீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்**
**கோட்டிடை வைத்த கவளம் போலக்**
**கையகத் ததுஅது பொய்யாகாதே**
**அருந்தே மாந்த நெஞ்சம்**
**வருந்த வேண்ட வாழ்க அவன்தானே"**
**(புறம்- 101)**

எனும் புறப்பாடல் வரிகள் விளக்குகின்றது. ஆராய்நத பிறகே ஒருவரிடம் நட்பு கொள்ள வேண்டும். நட்பு கொண்ட பிறகு ஆராய்வது சிறப்பாகாது. ஆதியன், பரிசில் பெற்றவுடன் ஔவை சென்றுவிட்டால் அவரைப் பிரிய நேரிடும் என அஞ்சினான். இதை ஔவை, அறியாவிட்டாலும் அதியனின் கொடையில் அவருக்குச் சந்தேகம் எழவில்லை. அவர் பாடிய பாடலில் அதியனின் நட்பு மீதும், ஔவை கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

### தெய்வ வழிபாட்டு முறைகள்

பண்டைத் தமிழ்நாட்டு மக்கள் பல தெய்வங்களை வணங்கி வந்தனர். அவர்கள் வணங்கிய தெய்வங்களுக்குக் கோயில்கள் இருந்தன. இதனை,

**"பணியினர் அத்தை நின்குடையே முனிவர்**
**முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே"**
**(புறம்-6)**

என்கிறார். அதாவது முனிவர்கள் சிவனின் கோயிலை வலம் வரும் பொருட்டு உன்னுடைய குடை தாழ்க அரசர்கள் கோயிலை வலமாகச் சுற்றி வரும்போது குடை பிடித் திருக்கமாட்டார்கள் என்று புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகின்றது.

### வீரமகளிர்

சங்க காலத்தில் மகளிர் போர்க்களம் சென்று போரிட்டதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால், ஆடவர்கள் போர்க்களம் செல்வதற்குத் தூண்டுகோலாய் உள்ளனர்.

"களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்று மகனிடம் தாய் எடுத்துரைக்கிறாள்.

**"பாறு மயிர்க்குடுமி எண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செமுகம் நோக்கிச் செல்க என விடுமே"**
***(புறம் -279)***

என்னும் பாடல் அடிகளில் தாயின் வீரஉணர்வு வெளிப்படுகிறது மேலும், புறப்புண்பட்டு போர்க்களத்தில் நின்மகன் வீழ்ந்தான் என்ற சொல்லைக் கேட்டு வஞ்சினம் கூறி வாளொடு சென்ற ஒரு தாய் உண்மை நிலை உணர்ந்து பெருமிதம் அடைந்த தன்மையினை,

**"சிதைந்து வேறு ஆகிய**
**படுமகன் கிடைக்கக் காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே"**
***(புறம்-276)***

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

### விருந்தோம்பல்

விருந்தோம்பல் தமிழரின் சிறந்த பண்பாகக் கருதப்படுகிறது. யாராக இருந்தாலும் வீடு தேடி வந்தால் அவர்களை வரவேற்று உபசரிக்கும் தன்மையினர் தமிழர்கள் ஆவர்.

**"இன்சொல் அளாவல் இடம் இனிது ஊன்யாவர்க்கம்**
**வன்சொல் களைந்து வகுப்பானேல்-மென்சொல்**
**முருந்து ஏப்க்கும் முட்போல் எயிற்றினால் நாளும்**
**விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து"**
***(ஏலாதி-7)***

என விருந்தோம்பும் முறையை விளக்குகிறது. இப்பாடலில் கூறியபடி அதியன் மகன் பொருட்டெழினி உண்ணத் தகுந்த முறையில் மட்டுமல்லாது உண்ணும் முறை அறிந்து விருந்து படைத்த தலைவன் என்பதை

**"கோண்மீன் அன்ன பொன்னலத்து அளைஇ**
**ஊண்முறை ஈத்தல் அன்றியும் கோள்முறை"**
***(புறம்-392)***

என வரும் புறநானூற்றுப் பாடல் வரிகள் தெரிவிக்கின்றன.

### சகுணம் பார்த்தல்

செல்களைத் தொடங்கும் முன் சகுணம் பார்க்கும் வழக்கங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று விரிச்சியாகும். விரிச்சி கேட்கும் போது நெல்லும், நீரும், சொரிவது வழக்கம். மன்னனின் மார்பில் தழும்பு பெரியனவாய் உள்ளன. வண்களும் மொய்த்து ஒலிக்கின்றன. ஏற்றி வைத்த விளக்குகளும் அணைந்து விடுகின்றன. நெல்லும், நீரும் சொரிந்து விரிச்சி கேட்குங்கால். செம்மையான முதுபெண் சொல்லிய சொற்களும் குறையுடையனவாய் உள்ளன என்னும் பொருளமைந்த மாறோகத்து நப்பசலையாரின் பாடலடிகளில் நெல்லையும், நீரையும் சொரிந்துன விரிச்சி கேட்கும் பழக்கம் சங்க காலத்தில் இருந்தது என்பதை,

**"நன்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்**
**செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா"**
***(புறம்-280)***

என்ற பாடலடிகளிலிருந்து அறிய முடிகின்றது.

**"நெல்லோடு நாழி கொண்ட நறுவீ முல்லை**
**அரும்பவி ழாலரி தூஉய்க் கைதொழுது**
**பொருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"**
***(முல்லை 8-11)***

என்ற பாடலடிகளின் கருத்தும் ஒப்பு நோக்கும் தன்மையுடையதாக அமைந்துள்ளது.

### தமிழர் வீரம்

**"குழவி பிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆளன்று என்று வாளின் தப்பார்"**
***(புறம்- 74)***

அரசர்க்கு அறம், பொருள், இன்பம் முதலியவற்றைக் காட்டிலும் மானமே சிறப்புடையதாகக் கருதப்பட்டது. பிள்ளை இறந்தே பிறந்தாலும் அல்லது தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் அவற்றை ஆள் அல்லன் என்று கருதாமல் வடுப்படுத்தி அடக்கம் செய்வர்.

*புறநானூறு சிறந்ததொரு பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. தமிழர்களின் ஈகைச்சிறப்பு, கல்வி, நம்பிக்கை, தெய்வ வழிபாடு, மகளிர்நிலை, விருந்தோம்பல், சகுணம் பார்த்தல், வீரம் ஆகியவற்றின் சிறப்புகளைப் பற்றி இப்புறநானூற்றுப் பாடல்கள் வழி அறியலாம்.*

***துணை நூற்பட்டியல்***

1. *மாணிக்கவாசகன் (உ.ஆ) - "புறநானூறு மூலமும், உரையும் உமா பதிப்பகம், சென்னை.*
2. *இளவழகனார் - "புறநானூற்றுச் சொற்பொழிவுகள்" திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.*
3. *திருநாவுக்கரசு. க.த - "திருக்குறளும், இந்திய அறநூல்களும்" மணியகம் வெளியீடு, சென்னை*
4. *மறைமலை அடிகள் - முல்லைப்பாட்டு ராமையா பதிப்பகம்.*